III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.2/2012

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Thiru.P.Kothandaraman, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 19-06-2024

| | | | |
|---|---|---|---|
| Name | : மனோவா | Village | : |
| Father's Name | : ஆதிமூலம் | Calling | : |
| Age | : | Taluk | : |
| Male/Female | Male | | |

**<u>முதலாம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

முதலாம் பிரதிவாதி இரண்டாம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த விடுதலை பத்திரம் பற்றி எனக்கு எப்போது தெரியும் என்றால் பதிவு செய்யப்பட்டதற்கு ஒரு மாதம் கழித்து எனக்கு தெரியவந்தது. அந்த விடுதலை பத்திரம் பின்னிட்டு 11.12.2012 அன்று ரத்தாகிவிட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. இன்று வரை தாவா சொத்திற்கு முதலாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகள் தான் உரிமையாளர்கள் என்றால் சரிதான். அவர்கள் 4 ஆம் பிரதிவாதிக்கு விற்ற பகுதியை தவிர்த்து மீதமுள்ள பகுதிக்கு இன்று வரை உரிமையாளர்கள் என்றால் சரிதான். 09.05.2011 அன்று நான் 3 வது மற்றும் 4 வது பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வா,த.சா.7 அறிவிப்பை அவர்களுக்கு அனுப்பப்பட்டதற்கான தபால் ரசீதுகள் மற்றும் அதை அவர்கள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டைகள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. அவற்றை தாக்கல் செய்யாததினால், நான் அந்த அறிவிப்பை 3 வது மற்றும் 4 வது பிரதிவாதிகளுக்கு அனுப்பவே இல்லை என்றால்

சரியல்ல. 3 ஆம் பிரதிவாதி என்னிடமிருந்து ரூ.3,25,000/- ஐ அவரது திருமண செலவிற்காக கடன் பெற்றிருந்த நிலையில் அதில் எப்பணமும் திருப்பிச் செலுத்தாத நிலையில், அத்தொகை மீதம் செலுத்த வேண்டிய கிரையான ரூ.19,25,000/-லிருந்து கழித்துக்கொள்ளப்படும் என குறிப்பிட்டு நான் 1 வது மற்றும் 2 வது பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. 3 ஆம் பிரதிவாதி 2 கேட்பு வரைவுகள் மூலம் மொத்த தொகையான ரூ.99,800/- எனக்கு 16.07.2011 அன்று செலுத்தினார் என்றால் சரிதான். அன்றைய தேதியில் பிலால் ரொக்கமாக என்னிடம் ரூ.50,200/- கொடுத்தார் என்றால் சரியல்ல. அதற்கு நான் ரசீது கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. மேற்கூறிய இரண்டு தொகைகளையும் சேர்த்து ரூ.1,50,000/-ஐ 3 ஆம் பிரதிவாதி, அவருக்கு நான் ஏற்கனவே கொடுத்த முன்பணத் தொகையை, திருப்பி செலுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் அதை இரட்டிப்பாக என்னிடம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த முன்பண தொகையை நான் பெற்றுக்கொண்டதற்கு நான் ரசீது கொடுத்துள்ளேன் என்றும் கொடுக்கவில்லை என்று இவ்வழக்கிற்காக நான் பொய்யாக கூறுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் கொடுத்த முன் பணத்தை பின்னிட்டு இரட்டிப்பாக நான் பெற்றுக்கொண்ட போதிலும் நான் ஏற்றுதல் ஆற்றுகை பரிகாரம் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் 3 ஆம் பிரதிவாதியிடம் 02.03.2011 அன்று ஏற்படுத்திக்கொண்ட கிரைய பத்திரம், தாவா சொத்தை குறைவான விலைக்கு பெற்று அதை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில், மோசடியாக ஏற்படுத்திக்கொண்டது என்றால் சரியல்ல. 02.03.2011 க்கு முன்னர் 3 ஆம் பிரதிவாதி 4 ஆம் பிரதிவதியுடன் ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியிருப்பதை தெரிந்து கொண்டும் மோசடியாக நான்

அன்றைய தேதியில் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல. நான் கேட்டிருக்கும் எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஆதலால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

(4வது மற்றும் 5வது பிரதிவாதி தரப்பின் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)